# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 82/2024 தேதி- 09.02.2026

(P.W.1) . சைனி

**குறுக்கு விசாரணை**

வழக்கு பட்டிகை சொத்திலிருந்து நான் வசிக்கும் வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் வழக்கு பட்டிகை சொத்தில்தான் வசித்து வருகிறேன். என்னை விளவங்கோடு தாலுகா கீழ்குளத்தில் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். நான் எனது கணவர் வீட்டில் வசிக்கவில்லை வழக்கு பட்டிகை சொத்தில்தான் வசித்து வருகிறேன். எனது சொத்திற்கு மேற்கு பக்கத்தில் பிரதிவாதியின் 3 3/4 சென்ட் சொத்து இருக்கிறது என்றால் சரிதான். பிரதிவாதியின் 3 3/4 சென்ட் சொத்திற்கு மேற்கு பக்கம் 2 1/4 சென்ட் சொத்து இருக்கிறது என்றால் சரிதான்.

வாதிகளாகிய எங்களுக்கு 6 சென்ட், பிரதிவாதிக்கு 3 3/4 சென்ட் போக இந்த வழக்கில் சொல்லும் 12 சென்டில் மீதம் 2 1/4 சென்ட் உள்ளது. மேற்படி 2 1/4 சென்ட் யாரிடம் இருக்கிறது என்றால் யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை. 2 1/4 சென்ட் யாருக்கு உரிமைப்பட்டது என்றால் எனது பாட்டிக்கு உரிமைப்பட்டது. எனது பாட்டி காலமாகிவிட்டார். எனது பாட்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 9 பேர்கள். மேற்படி 9 பேரில் எனது அப்பா ஒரு நபர் ஆவார். எனது அப்பாவிற்கு மேற்படி 2 1/4 சென்டில் உரிமை உண்டா என்றால் உரிமையுண்டு. மேற்படி 2 1/4 சென்டை யார் அனுபவித்து வருகிறார் என்றால் எனது அப்பாவின் அண்ணன் முத்துசுவாமி என்பவர் அனுபவித்து வருகிறார்.

வழக்கில் சொல்லும் 12 சென்ட் சொத்து ஆதியில் எனது அப்பாவும் பாட்டியும் சேர்ந்து விலைக்கு வாங்கியது என்றால் சரிதான். எனது அப்பாவும் மீதமுள்ள வாரிசுகளும் சேர்ந்து பிரதிவாதிக்கு 3 3/4 சென்ட் சொத்தை உரிமை மாற்றம் செய்தார்கள் என்றால் சரிதான். 3 3/4 சென்ட் சொத்தை பிரதிவாதி வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ. 1 , வா.சா.ஆ. 2, வா.சா.ஆ- 6, வா.சா.-ஆ.7, வா.சா-ஆ.8 ஆகிய ஆவணங்களில் அளவுகளோடு கூடிய வரைபடம் இருக்கிறதா என்றால் எதிலும் இல்லை. சொத்து விபரம் சொல்லக்கூடிய இடத்தில் கிழமேல் எவ்வளவு நீளம் தென்வடல் எவ்வளவு நீளம் என நான்கு பக்க அளவுகள் சொல்லப்பட்டிருக்கிறதா என்றால்

சொல்லப்படவில்லை.

வா.சா.ஆ- 4 ஆவணம் கூட்டுப்பட்டா என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் வாதிகளாகிய எங்களுடைய பெயர்கள் இருக்கிறது என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் 12 ஏர் பரப்பளவு உள்ளது என்றால் சரிதான். வருவாய் துறையால் அளவீடு செய்து உட்பிரிவு செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ- 7 ஆவணத்தில் வாக்கால் பாகம் பிரிந்ததில் 6 சென்ட் எனக்கு கிடைத்தது என எனது அப்பா எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு 2020 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. கடந்த 2 வருடங்களாக நான் வழக்கு சொத்தில்தான் குடியிருந்து வருகிறேன். 2018 ஆம் ஆண்டு எனக்கும் என்னுடைய சகோதரிக்கும் வழக்கு எ பட்டிகை சொத்து கிடைத்தது என்றால் சரிதான்.

பிரதிவாதி எனது சித்தப்பா ஆவார். எனது சொத்தின் மேற்கு பக்க சொத்தை மீட்டெடுக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்கு பக்கம் கூடுதலாக இருக்கும் சொத்து என கூறுவது ஹலோ பிரிக்ஸ் அடுக்கிவைக்கப்பட்ட இடத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்தை மீட்க வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2018 ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை வழக்கு எ பட்டிகை சொத்தை உட்பிரிவு செய்ய வருவாய்த்துறைக்கு மனு ஏதாவது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வாதிகளாகிய எங்கள் பெயருக்கு தனிப்பட்டா கிடைக்க ஏதாவது முயற்சி செய்தேனா என்றால் செய்யவில்லை.

இந்த வழக்கில் சொல்லும் 12 சென்ட் சொத்தும் வீதம் வைக்கப்படாமல் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு எ பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் யாருடைய சொத்து இருப்பதாக நான் கூறியிருக்கிறேன் என்றால் பாட்டி மற்றும் பலருக்கு இருப்பதாக உள்ளது. கிழக்கு பக்கம் பாட்டிக்கும் பலருக்கும் என்று இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். எ பட்டிகை சொத்திற்கு கிழக்கு பக்கமும் பாட்டி மற்றும் பலரின் சொத்து உள்ளதாகதான் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி இடம் 12 சென்டில் வராது ஆனால் வழக்கு பட்டிகை சர்வே எண்ணில்தான் வரும். 12 சென்ட் சொத்தும் மேற்கு பக்கமுள்ள சொத்தும் உட்பிரிவு ஆகவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்துள்ளேன். நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் வழக்கிலுள்ள 12

சென்டையும் அளக்கவில்லை என்றால் சரிதான். மறுபடியும் பிரதிவாதி நீதிமன்ற ஆணையரை 12 சென்ட் சொத்தையும் அளவீடு செய்ய வேண்டினால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நீதிமன்ற ஆணையரிடம் பட்டிகை சொத்தின் புகைப்படத்தை எடுத்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நாங்கள் வேண்டவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் A, B, C,D க்கு உள்ளாக தென்வடலாக ஹலோ பிரிக்ஸ் வைத்து ஒரு எல்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஹலோ பிரிக்ஸ் அடுக்கி வைக்கப்பட்டுள்ள இடைப்பட்ட பாகத்தில்தான் எங்களது வீடு உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் ஹலோ பிரிக்ஸ் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் பகுதியை தாண்டி 3 மீட்டர் இடைவெளிவிட்டு ஒரு எல்கை நிர்ணயித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 3 மீட்டர் இடைவெளி உள்ள பகுதியை கைவசம் கிடைக்க கேட்டுதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி இடத்தில்தான் 3 பலாமரம் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி பலா மரத்திற்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 30 வருட பழக்கம் இருக்கும். 3 பலாமரம் இருப்பதை வழக்குரை சொத்து விபரத்திலோ ஆணையர் அறிக்கையிலோ கூறப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. எனது சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் அதைப்பற்றி கூறவில்லை. மேற்படி 3 பலாமரமும் பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பததால்தான் அதை கூறவில்லை என்றால் யாரும் அதை அனுபவிக்கவில்லை அதனால் கூறவில்லை. எனது வீட்டிற்கு பின் பக்கமிருக்கும் முள்வேலி யாருக்கு உரிமைப்பட்டது என்றால் நல்லதம்பி வகையறாவுக்கு உரிமைப்பட்டது.

12 சென்ட் சொத்திற்கு வடக்கு பக்கம் ரோடு உள்ளது என்றால் சரிதான். ரோடு இருக்கும் பகுதியிலும் வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே உட்பிரிவு வரும் என்றால் சரிதான். வடக்கு பக்கமுள்ள ரோட்டிற்கு நாங்கள்தான் இடம் கொடுத்தோம். அந்த இடத்தை ஆணையர் வரைபடத்தில் காட்டியுள்ளாரா என்றால் காட்டவில்லை. சம்பந்தப்பட்ட சர்வே உட்பிரிவு எந்த இடத்தில் தொடங்குகிறது என்று ஆணையர் அவரது வரைபடத்தில் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. D, C, மற்றும் E,F எல்கை நாங்கள் வேண்டியபடி ஆணையர் மற்றும் குறுவட்ட அளவர் நிர்ணயித்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி எல்கை நிர்ணயம் செய்ததற்கு

ஏதாவது ஆவணம் இருக்கிறதா என்றால் எங்களது ஆவணத்தின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆவணத்தில் வரைபடம் எதுவும் இணைக்கவில்லை என்றால் சரிதான்.

D,C, மற்றும் E,F ல் அளவு கல் எதுவும் கிடையாது என்றால் சரிதான். AB என்ற பகுதியிலும் அளவு கல் கிடையாது என்றால் சரிதான். ஹலோ பிரிக்ஸ் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கும் தரைமட்டத்தில் சிமிண்ட்கல்கட்டு கட்டியிருக்கும் இடைப்பட்ட பகுதிதான் பிரதிவாதியின் 3 3/4 சென்ட் இருப்பதாக பிரதிவாதி கூறுகிறார் என்றால் சரிதான். மேற்படி 3 3/4 சென்டிற்கு நடுவில்தான் C. D என்ற ஒரு கோடு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். C. D கோட்டிலிருந்து மேற்கு பக்கம் E,F பகுதிவரை பிரதிவாதியின் 3 3/4 சென்டாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். E,F கோடு போட்ட பகுதி இந்த வழக்கில் தரப்பினர் அல்லாதவரின் சொத்து என்றால் சரிதான் அது எனது பாட்டியின் பெயரில் உள்ளது.

பிரதிவாதியின் சொத்தின் மேற்கு பக்கமிருக்கும் முத்துசுவாமியை இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான் அது எனது பாட்டியின் பெயரில் உள்ளது. AB சொத்துகளுக்கு கிழக்கு பக்கமும் மேற்கு பக்கமும் ஒரே சர்வே உட்பிரிவு கொண்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளக்க வரும்போது ரீசர்வே வரைபடத்தை தாக்கல் செய்தோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. ரீசர்வே அளவுபடி அளக்காததால் ஆணையர் வரைபடம் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 5 உட்பிரிவுகள் உள்ளது அந்த 5 உட்பிரிவுகளும் எங்கு தொடங்குகிறது என்று ஆணையர் குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை. நீதிமன்ற ஆணையர் நாங்கள் கூறியதை வைத்து எல்லை நிர்ணயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஆவணத்தின் அடிப்படையில் அளந்து காட்டியுள்ளார்.

C. D என கோடிட்டிருக்கும் பகுதியை நாங்கள் எல்லையாக காட்டி கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்ய வேறு எந்த காரணமும் கிடையாது. குறைவாக இருக்கக்கூடிய பகுதி எவ்வளவு இருக்கும் என்றால் 6 சென்டில் 2 சென்ட் குறைவாக உள்ளது. 6 சென்ட் சொத்து எங்களுக்கு உரிமைப்பட்ட சொத்து என்று விளம்புகை பரிகாரம் கேட்க நாங்கள் தயாரா என்றால் தயார். 2018 ஆம் ஆண்டு எனது அப்பா எங்களுக்கு சொத்தை கொடுக்கும்போது எல்லை நிர்ணயித்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். எல்கை

நிர்ணயிக்கும்போது போலீஸில் புகார் கொடுத்து பிரச்சனை ஏற்பட்டது. அது 2018 ஆம் ஆண்டு ஏற்பட்டது. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் எனது அப்பா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரையோ, ரசீதையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாரா என்றால் புகாரோ ரசீதோ என்னிடம் இல்லை.

எனது முதல் விசாரணையில் உள்ள சங்கதியை நான்தான் சொல்லி எனது வழக்கறிஞர் தாக்கல் செய்தார். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 22.08.2004 அன்று பிரதிவாதி தனது அடியாட்களிடம் இரவு நேரத்தில் வந்து காம்போண்ட் சுவர் கட்டுவதற்கு முயற்சி செய்தார் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அடியாட்கள் என நான் கூறியிப்பது யார் என்று நான் பார்த்தேனா என்றால் இரவு சத்தம்கேட்டது எனது அப்பா வெளியில் சென்று பார்த்தார். நாங்கள் நேரடியாக பார்க்கவில்லை.

நீதிமன்ற ஆணையர் பார்வையிட வரும்போது கட்டுமானம் சம்பந்தமாக அங்கு இருக்கும் பொருட்களை புகைப்படம் எடுத்து அறிக்கை அளிக்குமாறு நாங்கள் கேட்டோமா என்றால் கேட்கவில்லை. 22.08.2004 அன்று பிரதிவாதி சம்பவயிடத்திற்கு வரவில்லை நான் பொய் சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல பிரதிவாதி அங்கு வந்தார். எனது வழக்குரையின் அடிப்படையிலோ, நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின் அடிப்படையிலோ எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்த மூலகாரணமும் இல்லாமல் இந்த வழக்கை பிரதிவாதியின்மேல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யான வழக்கு என்பதால் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.